# கட்டான பிரதேச சபை

# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்டான பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்துகையின் பிரகாரம் நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை (ஏனைய வருமானம்) காசு அடிப்படையில் கணக்குகளில் வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய அறவிடவேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 80,000,000 தொகை கணக்குகளுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 2,012,787 இற்காக ரூபா 1,742,787 தொகை மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கடன்கொடுத்தோர் கணக்கில் சாட்டுதல் செய்யப்பட்ட நிராகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு செலவினத் தலைப்பின் ஊடாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மற்றும் களஞ்சியக் கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்ட செலவினத் தலைப்புக்களில் சாட்டுதல் செய்யப்பட்ட ரூபா 11,798,120

கூட்டுத்தொகையான களஞ்சிய மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) வேலை பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 78 செயற்திட்டங்களின் செலவினமான ரூபா 9,868,320 தொகை கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) காணி மற்றும் கட்டிடக் கணக்குகளின் பிரகாரமான பெறுமதிக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரமான பெறுமதிக்கும் இடையே ரூபா 219,927 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(உ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 30,259,403 ஆக இருந்ததுடன் அதற்குரிய பட்டோலைகளின் சரியான கூட்டுத்தொகையின் பிரகாரம் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 29,965,903 ஆனமையால் ரூபா 293,500 தொகையான வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஊ) ரூபா 1,139,162 பெறுமதியான மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நிலுவையாக இருந்த களியாட்ட வரிக்காக பேரேட்டில் கணக்கொன்று பேணப்பட்டிராமையினால் கட்டான உப அலுவலகத்திற்குரிய ரூபா 2,487 தொகையான நிலுவையாகயிருந்த களியாட்ட வரி மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 105,116,954 ஆக இருந்ததுடன், துணைப் பதிவேடுகள் /அறிக்கைகளின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 106,571,711 ஆக இருந்தது.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 37,092 தொகையான தொங்கல் கணக்கு மீதியினை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தினை விஞ்சியிருந்த செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,685,681 ஆக இருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 63,869,152 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பனவற்றிக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| **(அ)** | **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) ஒழுங்கு விதிகள்** | |
| (i) | 59 ஆவது விதி | தொடர்புடைய விதியின் பிரகாரம் சபை அதிகார பிரதேசத்தினுள் மெய்மையாய்வொன்று மேற் கொள்ளப்பட்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் கைத்தொழில்கள் தொடர்பான பட்டியலொன்றைத் தயாரித்து அப்பட்டியலை ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 164 ஆவது விதி | கணக்கீடுகளுக்குரிய ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் நாளாந்தம் பரீட்சிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பரீட்சிக்கப்பட்டமையை சிற்றொப்பம் இட்டு உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 180 ஆவது விதி | காசுப் பொறுப்பாளர், களஞ்சியப் பொறுப்பாளர், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்துதல் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடுதல் போன்ற பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெறப்பட்டிருக்க வில்லை. |

(ஆ) **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்**

| | |
|---|---|
| இல. 133 மற்றும் 134 | சபையினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 110,451,062 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 610,280 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்களை 2011 பெப்ரவரி 07 ஆம் திகதிய டபிள்யூஎன்/ப.பா/வி.வா/2011/1 ஆம் இலக்க எனது கடிதத்தின் பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் சமர்ப்பிக்குமாறு தலைவரிடம் கோரப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்திற்குரிய அத்தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறனான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறானது | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறானது | முரண் |
| | ரூபா‘000 | ரூபா‘000 | ரூபா‘000 | ரூபா‘000 | ரூப‘000 | ரூபா ‘000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணிக்கான வேதனம் | 43,469 | 37,352 | 6,117 | 44,795 | 36,735 | 8,060 |
| ஏனையவை | 41,585 | 67,885 | (26,300) | 38,133 | 51,203 | (13,070) |
| உப மொத்தம் | 85,054 | 105,237 | (20,183) | 82,928 | 87,938 | (5,010) |
| மூலதனச் செலவினம் | 42,254 | 127,470 | (85,216) | 23,483 | 131,546 | (108,063) |
| மொத்தம் | 127,308 | 232,707 | (105,399) | 106,411 | 219,484 | (113,073) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - |
| இரண்டாம் தரத்தினர் | 38 | 27 |
| ஆரம்ப தரத்தினர் | 129 | 110 |
| ஏனைய (அமைய மற்றும் தற்காலிக) | 02 | 101 |
| | 170 | 238 |

உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் 98 அமைய தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 கிடைக்கவேண்டிய கணக்குகள்

(அ) 1997 ஆம் ஆண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக குறைவாக மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 2,688,750 தொகையானது கடன்பட்டோராக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) முற்கொடுப்பனவுப் பதிவேட்டின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய மீதி ரூபா 3,584,140 ஆக இருந்ததடன் ரூபா 2,705,844 தொகையான மீதியொன்று 2004 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,393,666 ஆக இருந்ததுடன் சேவையை விட்டுச் செல்லல், மரணித்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் தற்போது சேவையில் இல்லாத 16 உத்தியோகத்தர்களிடமிருந்தும் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகள் ரூபா 252,796 ஆகும்.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### சேமிக்கப்பட்ட விடுமுறையை அடிப்படையாகக் கொண்டு மீளச் சேவையில் ஈடுபடுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஓய்வுபெற்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்கள் சேமித்திருந்த விடுமுறையின் அடிப்படையில் மீளச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரத்தொழுகம உப அலுவலகத்தில் பணிப்பொறுப்பு உத்தியோகத்தரை சேவையில் ஈடுபடுத்துவதற்கு உரிய உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரத்தொழுகம உப அலுவலகத்தில் ஓய்வுபெற்ற பணிப்பொறுப்பு உத்தியோகத்தர் அங்கீகாரமின்றி $4^{1}/_{2}$ மாதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 80,811 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரை மீளச் சேவையில் ஈடுபடுத்தும் போது 2007 மே 11 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 9/2007 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்காக முரணாக ரூபா 47,824 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) கணக்குகளைத் தயாரிக்கும் செயற்பாடுகளுக்கான கொடுப்பனவு

சபையின் கணக்குகளைத் தயாரிக்கும் செயற்பாடுகளுக்காக முகாமைத்துவ சேவையின் ஒரு உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அவரது சேவை பெறப்படாமல் 2010 பெப்ரவரி 25 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது பெறப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2009 இன் கணக்குகளைத் தயாரிப்பதற்காக ஓய்வுபெற்ற ஒரு உத்தியோகத்தரின் சேவை பெறப்பட்டு அதற்காக நாளொன்றுக்கு ரூபா 1,000 படி 24 நாட்களுக்கு ரூபா 24,000 செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) தனியார் இறைச்சிக் கடைகளுக்காக வருடாந்த வாடகை அறவீடு**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1)(xi) மற்றும் (xii) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வழங்க முடியுமான போதிலும் அதற்கு முரணாக பிரதேச சபைக்குச் சொந்தமற்ற ஐந்து தனியார் இறைச்சிக் கடைகளிலிருந்தும் ரூபா 370,000 தொகையான வருடாந்த வாடகை அறவீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) ஆதனவரி மென்பொருள் பராமரிப்பிற்கான கொடுப்பனவு செய்தல்**

சபையின் ஆதனவரியை கணனி மயப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 51,000 செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2001 ஒக்தோபர் 12 ஆந் திகதிய உள்ளூராட்சிச் சுற்றுநிருபத்தின் எல்ஜீ/15/2011 ஆம் இலக்கத்தின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆதனவரி கணனி மயப்படுத்தப்பட்டதன் பின்னர் மேலதிக சேவையினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் பதவியணியினருக்காக முழுமையான பயிற்சியொன்று வழங்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் மென்பொருளுக்காக வருடாந்தம் சேவை ஒப்பந்தமொன்று பேணப்படுவது தேவையற்றிருந்ததனால் மென் பொருள் வழங்குனருக்கு ரூபா 30,000 தொகையான சேவைக் கட்டணமொன்று செலுத்தும் அவசியமொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம் காலி மாதம்பே, பூகோள கணனி சிஸ்டம்ஸ் நிறுவனத்திற்கு எழுத வேண்டியிருந்த போதிலும் தனிநபர் ஒருவரின் பெயரில் காசோலை எழுதப்பட்டிருந்தது.

(iii) மென்பொருள் சேயினைப் பெறுவதற்காக உடன்படிக்கையொன்று காணப்படுகின்ற போது புதிய படிவத்தின் பிரகாரம் புதிய கணனியினால் தயாரிக்கப்பட்ட பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டிருந்த மென்பொருளை ஸ்தாபித்தல் மற்றும் புதிய கணனியொன்றுக்கு மென்பொருளை ஸ்தாபிப்பதற்காக ரூபா 21,000 தொகை செலுத்தப்பட்டமைக்கான காரணம் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தினுள் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்